# 6 தீபாவளிப் பண்டிகை

எமது சமய நூல்களில் விரதங்கள், பண்டிகைகள் ஆகிய இரண்டும் இணைத்துக் கூறப்படுகின்றன. எனினும் இவை இரண்டிற்கும் வேறுபாடுகள் உள்ளன. ஆதலால் முதலில் பண்டிகை என்ற சொல்லின் பொருளைப் பார்க்கும் போது அது பெருநாள், விசேட நாள் என்பவற்றைக் குறித்து நிற்கின்றது. இதனை தற்கால தமிழ் அகராதி''தாம் சார்ந்துள்ள சமயத்திற்கு முக்கியமானதாகக் கருதப்பட்டு வருடத்தில் குறிப்பிட்ட நாள் விருந்துடன் சிறப்பாக கொண்டாடப்படுவது '' என்று வரைவிலக்கணம் கொடுத்துள்ளது.

ஆதலால் விரதத்தைப்போல் பண்டிகைக்கும் சமய முக்கியத்துவம் இருப்பினும் இவை இரண்டிற்கும் அடிப்படை வேறுபாடு இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். விரதமோ உணவை சுருக்குதல்,விடுத்தல் என விதியிட பண்டிகையோ பல வகை உணவுகளைச் சிறுவர்கள், பெரியவர்கள், அயலவர்கள், நண்பர்கள் கூடி உண்ணும் விருந்துபசாரமாக காணப்படுகின்றது. மேலும் பண்டிகைகளில் புத்தாடை அணிதல், உறவினர் வீட்டிற்குச் செல்லுதல், வாழ்த்து மடல்கள் அனுப்புதல், கலை நிகழ்ச்சிகள் போன்றன இடம்பெறுகின்றன. ஆனால் விரதங்களில் இத்தன்மைகள் இடம்பெறுவதில்லை. இவ்வகையில் பண்டிகைகள் என்ற வகையில் தைப் பொங்கல், தீபாவளி, சித்திரைப் புத்தாண்டு, ஆடிப்பிறப்பு, ஓணம் பண்டிகை, காமன் பண்டிகை என்பன குறிப்பிடத்தக்க பண்டிகைகள் ஆகும். இவ்வாறான பண்டிகைகளுள் தீபாவளிப் பண்டிகை பற்றி விரிவாகக் கற்போம்.

## தீபாவளி (தீபாவலி)

பாரதத்தில் இமயம் தொடக்கம் குமரி மலை பல பிரதேசங்களிலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் கொண்டாடப்படும் பண்டிகை தீபாவளி ஆகும். இப்பண்டிகை ஐப்பசி மாதத்தின் அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய விடியற்காலை நேரம் (சந்திரனுதிக்கும் காலம்) கொண்டாடப்படுகின்றது. சைவர்கள், வைணவர்கள் உள்ளிட்ட இந்துநெறிப் பிரிவினர் யாவராலும் கொண்டாடப்படுதலுடன் பிரபல்யம் பெற்ற பண்டிகையாகவும் காணப்படுகின்றது.



**தீபாவளி என்பதன் பொருள் :**
வீட்டிலும், கிணற்றடியிலும், பூந் தோட்டத்திலும் பிற இடங்களிலும் விஷேடமாக விளக்கேற்றப்படுவதால் இந்நாளுக்கு தீபாவளி என்று பெயர். (தீபாவலி = தீப + ஆவலி) விளக்குகளை

நிரையாக ஏற்றுதல், புத்தாடை அணிதல் ஆனால் இச்சொல் மரபு இன்று தீபாவளி என்னும் பெயரால் அழைக்கப்பட்டே கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினம் யாவரும் நீராடி கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து இயன்றளவு புண்ணிய காரியங்கள் செய்ய வேண்டும். அன்று உபவாச விரதம் அனுட்டித்தல் சிறந்தது. அந்த நாள் ஆன்மாக்கள் நரக வழியினின்றும் கடவுளால் நீக்கப்படும் . இதனால் இதற்கு நரக சதுர்த்தசி என்று பெயர் கொள்ளப்பட்டுள்ளது.

**நரகாசுரன் கதை**:தீபாவளிப் பண்டிகையுடன் நரகாசுரன் என்ற அசுரன் கதை தொடர்புடையது. இந்த அசுரன் குடிமக்களை கொடுமைப்படுத்தினான் குளித்தல், சேலை துவைத்தல், வீடுகளைக் கூட்டுதல், மெழுகுதல் முதலிய நற்செயல்கள் எல்லாவற்றையும் தன் ஆணையால் தடுத்தான். மக்களை பாவ வழியிலே செலுத்தினான்.



இந்நிலையில் விஸ்ணு அசுரனைக் கொன்று மக்களைக் காப்பாற்றினார். இறப்பதற்கு முன் அவன் ''கடவுளே நான் எனக்காக ஒரு நன்மையும் கேட்கவில்லை. இறுதி நாளிலே எவர் ஆசாரமிக்கவர்களாய், நல்லொழுக்கம் உள்ளவர்களாய் கொலை முதலிய பாவங்களை விடுத்து தேவனை பூஜிக்கின்றார்களோ அவர்களுக்கு விஷேட நன்மை செய்தருள்க'' என்று வேண்டிக் கொண்டான். இதனடிப்படையில் இப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

**வடபாரதத்தில் தீபாவளி :**

வட பாரதத்தில் இப்பண்டிகை பல பெயர்களால் கொண்டாடப்படுகின்றது. அவற்றுள்

1. யட்ச ராத்திரி (அசுரன் இரவு)
2. ஜெகத் ராத்திரி
3. சுகராத்திரி
4. தீபோற்சவம்
5. தீபப்பிரதிபதி உற்சவம்
6. தீப மாலா வர்ணனம்
7. கார்த்திகா அமயம் தீபமாலா வர்ணனம்
8. தீவாளி என்பன குறிப்பிடத்தக்கன.

**தென்பாரதத்தில் தீபாவளி :**

வடபாரதத்தில் இப்பண்டிகை மேற்கூறப்பட்ட பெயர்களில் கொண்டாடப்படும் அதே வேளை தென்பாரதத்தில் கொண்டாடப்பட்டமை பற்றிய குறிப்புகள் பல உள்ளன. அவற்றுள் இரண்டு குறிப்புக்கள் முக்கியமானவையாகும். அவையாவன.

1. முற்கால சாளுக்கிய மன்னனான திருப்புவன மல்லவின் கி.பி 1117ன் கன்னடக் கல்வெட்டு.
2. விஜய நகர ஆட்சிபற்றி ''ஆகாச பைரவகதா'' என்ற நூலில் மன்னனின் வெற்றி,

செல்வ வளம் என்பவற்றுக்காக இரு நாட்கள் மகாலட்சுமி பூஜை செய்தது என்பவையாகும்.

## கொண்டாட்ட முறை :

தீபாவளிப் பண்டிகை தென்பாரதத்தில் இருநாட்கள் கொண்டாடப்படுகின்றது. இலங்கை போன்ற நாடுகளில் ஒரு நாள் பண்டிகையாகவும் கொண்டாடப்படுகின்றது. வட பாரதத்தில் பின்வரும் ஐந்து நாள் கொண்டாட்டமாக கடைப்பிடிக்கப்படுகின்றது.

01. பழைய பொருட்களை நீக்கி விட்டுப் புதுப்பொருட்களை வாங்கல்.
02. வீட்டில் மாவிளக் கேற்றல்.
03. சாணத்தால் செய்த மனித உருவத்தில் தலையில் விளக்கேற்றல்
04. கோவர்த்தன கிரி உருவம் செய்து அதனைச் சூழ்ந்து ஆடிப்பாடுதல்.
05. மணமான பெண்கள் பூஜை செய்தலின் பின் தங்கள் சகோதரர்களுக்கு திலகமிட்டு விருந்துக்கு அழைத்தல் என்பவையாகும். இவற்றை நோக்கும் போது இப்பண்டிகை கொண்டாடும் முறை வேறுபடுதலை அறிந்து கொள்ளலாம். எனினும் இப்பண்டிகையை கொண்டாடுதலால் ''கேளிக்கைகள்'' செல்வாக்குப் பெறுகின்றன.

### தீபாவளிப் பண்டிகையில் தவிர்க்க வேண்டியவையும், கடைப்பிடிக்க வேண்டியவையும்

இப்பண்டிகைக் காலத்தில் கொலை, புலாலுண்ணல், கள்ளுண்ணல் முதலியவற்றைச் செய்யாதிருப்பது சிறந்தது. இப்பண்டிகை காலத்தில் செய்யப்படும் பூசைகளும் நற்செயல்களும் ஆன்மாக்களை நரகத்தினின்றும் காக்கும் எனப் பத்ம புராணம் கூறுகின்றது. ஆதலால் அவசியம் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும். நீராடலுக்குரிய எண்ணெய் இலட்சுமியாகவும் நீரை கங்கா தேவியாகவும் நினைத்து இப்பண்டிகையை நாம் கொண்டாடி மகிழ்வோம்.

### பயிற்சிகள்

1. தீபாவளி, தீபாவலி என்பவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
2. நரகாசுரன் இறப்பதற்கு முன் விஷ்ணுவிடம் வேண்டியவற்றை எழுதுக.
3. தென் பாரதத்தில் இப்பண்டிகை கொண்டாடப்படுவதற்கான சான்றுகள் இரண்டு தருக.
4. தீபாவளிப் பண்டிகை காலத்தில் மேற்கொள்ளப்படும் கேளிக்கைகள் நான்கினைத் தருக.
5. தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவதால் ஏற்படும் நன்மைகள் 3 தருக.
6. தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் தவிர்க்க வேண்டியவற்றை எழுதுக.

## செயற்பாடு

★ ''தீபாவளிப்பண்டிகையும் நற்பண்புகளும்'' என்ற தலைப்பில் ஐந்து நிமிடம் பேச்சொன்றை வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுக.

## பாடச்சுருக்கம்

✶ இந்துப் பண்டிகைகளுள் தீபாவளியும் ஒன்றாகும்.

✶ நரகாசுரன் கதையுடன் தொடர்புடைய பண்டிகை ஆகும்.

✶ வட பாரதம், தென்பாரதம்,இலங்கை போன்ற நாடுகளில் கொண்டாடப்படுவது.

✶ தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாத அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய விடியற்காலை நேரம் கொண்டாடப்படுகின்றது.